# குருசேத்திரம்

කුරුසේත්තිරම්

Guruseththiram

களம்: மூன்று    கணை: பதினைந்து    மே - 2022



**சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்தே...**

# குருசேத்திரம்

## 3 ஆவது களத்தில்...

## மே - 2022

# குருசேத்திரம்

சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...


**பிரதம ஆசிரியர்**
திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்

**இணை ஆசிரியர்**
திரு. ஞா.இரத்தினசிங்கம்
திரு. ம.நிரேஸ்குமார்
திரு. ஞா.கயூரன்

**தொழில்நுட்பமும் பசுமை எண்ணக்கருவும்**
திரு. நா.அம்பிகைபாகன்
திரு. த.குவேந்திரன்

**தொழில்நுட்பமும் ஆக்க வடிவமைப்பும்**
திரு. வே.நந்தகுமார்
திரு. பொ.விஜயகுமாரன்

**நூலறிதலும் மேம்பாடும்**
கலாநிதி. நா.சந்திரிக்கா
திருமதி. ப.ஜெயச்சந்திரன்

**கதைக்களம்**
செல்வி. வி.கந்தசாமி
திரு. ம.நிரேஸ்குமார்

**காண்பியப் பொறுப்பு**
திரு. கே.ஆர்.கமலநாதன்



**வெளியீடு**
குருசேத்திரம் வெளியீடு
யாழ்ப்பாணம்.



**தொடர்புகளுக்கு**
gurusеththiram@gmail.com


## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| ☞ ஆசிரியரின் உள்ளத்திலிருந்து | 01 |
| ☞ காட்சியும் கருத்தும் | 02 |
| ☞ அறிவு - தேடல் - அனுபவமாக்கல்: சிறுவர் கல்விக்கான அணுகுமுறை | 03 |
| ☞ போன மச்சான் திரும்பி வந்தான்... | 05 |
| ☞ வீரர்கள் வருவார்கள் விளையாட | 06 |
| ☞ படித்ததில் பிடித்தது! - | 08 |
| ☞ "இன்பா"வின் சிந்தனைத் தொடர்கள் -- 6 கதைகளால் நிஜமாகி... | 09 |
| ☞ சோசலிசம் எதற்காக? (ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்) | 11 |
| ☞ நூலகம் அன்றும் இன்றும் | 13 |
| ☞ விடியல் | 14 |
| ☞ தோத்தாலும் ஜெயிச்சாலும் மீசையை முறுக்கு | 16 |
| ☞ நிலை மாறும் வாழ்க்கை | 17 |
| ☞ பேசும் படங்கள்...! | 17 |



☞ குருசேத்திரத்தில் இடம் பெறுகின்ற கட்டுரைகள், ஆக்கங்களில் கூறப் பட்டுள்ள கருத்துக்கள் மற்றும் தகவல்களுக்கு அதனை எழுதியவர்களே பொறுப்புக் கூறக் கடப்பாடுடையவர்கள்!

குருசேத்திரம்
சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...

# ஆசிரியர் உள்ளத்திலிருந்து...

**இதுவரை நடந்ததை எண்ணி யோசிப்பதைவிட...**
**இனி எப்படி நடக்க வேண்டும்...**
**என யோசிப்பவர்களே...**
**வாழ்க்கையை வாழத் தெரிந்தவர்கள்...!**

குருசேத்திரம் இரண்டுவருட நிறைவுச் சஞ்சிகைக்கு சில சிந்தனைத்துளிகளை பகிரிந்துகொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன். குருசேத்திரம் குழுமமானது தனது இலக்கு நோக்கிய பயணத்தில் சில அடையாளங்களை மக்களிடத்தில் இட்டுவருகின்றது என்பதில் குழுமத்தின் தலைவர் என்'ற வகையில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கொவிட் 19, பொருளாதார அரசியல் நெருக்கடி என்பவற்றிற்கு மத்தியிலும் குருசேத்திரம், சமூக மாற்றத்திற்கான சிறிய சிறிய அருட்டல்களை உள்நாட்டில் கிராம மட்டங்களிலும் வெளிநாட்டிலும் ஏற்படுத்தி வருகின்றது. ஒரு சமூகத்தின் மாற்றமானது தனிநபர்களில் ஏற்படுகின்ற மாற்றமாகக் கருதப்படுகின்றது.

21ஆம் நூற்றாண்டின் கல்வி, பூகோளப் போக்கின்படி நவீன உலக பொருளாதார, தொழில் நுட்ப, சமூகத் துறைகளில் நிகழுகின்ற விரைவான மாற்றங்களுக்கு ஊக்கல் வழங்கும் பிரதான கருவியாக கல்வி அமைகின்றது. நான்காவது கைத்தொழில் புரட்சிக்கு அமைவாக கல்வி இலக்கை வெற்றி கொள்ளுவதற்கு நிறைவேற்ற வேண்டிய பல்பரிமான மாற்றங்களை நாங்கள் உள்வாங்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். சுய வழிப்படுத்தப்பட்ட கற்றல் எவ்வளவு முக்கியமோ அதேயளவு சுய வழிப்படுத்தப்பட்ட பொருளாதார மேம்பாடும் மிக முக்கியமாகக் கருதப்படுகின்றது.

தற்போது எமது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பின்னடைவுகளைச் சமாளிப்பதற்கான மிக முக்கிய காரணியாக சுய பொருளாதார மேம்பாடும், குறைந்தபட்சம் எமக்கான உணவை நாமே தயாரித்துக் கொள்ள வேண்டிய இயலளவும், புதிய வழமைக்கான வாழ்வியலை வளர்த்துக்கொள்வதுடன், இறக்குமதிப் பொருட்களில் தங்கியிருப்பதற்கான சந்தர்ப்பங்களைக் குறைப்பதன் மூலமும், இயற்கைச் சமநிலையோடு ஒன்றிப் போவதற்கான செயலாற்றுகைகளை மேற்கொள்வதன் மூலமும் எம்மை தக்கவைத்திருப்பதற்கான சந்தர்ப்பங்களை பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தனிமனித வாழ்வியலை தூரநோக்கோடு சிந்திப்பதுடன் உள்ளூர் வளங்களின் பயன்பாட்டை அதிகரிப்பதற்கான முனைப்புக்களில் ஈடுபடுவோம். எம்மிடமுள்ள நீர், நில வளங்களை பயன்படுத்துவதன் மூலம் சுய பொருளாதாரத்தில் மேம்பாடடைவோம்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கும் வரை...

**சு.பரமானந்தம்**
**பிரதம ஆசிரியர்**

# காட்சியும் கருத்தும்

திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்
பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

மன மகிழ்ச்சியிலேயே ஒருவருடைய ஆளுமை தங்கியுள்ளது. அவ்வகையிலே இப்பொருளாதாரப் பின்னடைவில் எனது பங்களிப்பு என்ன?

விமர்சனங்களும், அறிக்கைகளும் பொருளாதார மேம்பாட்டிற்கு எந்தளவு உதவும்.

முயற்சிப்போம்.... சுய பொருளாதார வளர்ச்சிக்கு...






**இவர்களின் விடுதலைக்காக இறைவனை பிரார்த்தனை செய்வோம்.**

# அறிவு - தேடல் - அனுபவமாக்கல்: சிறுவர் கல்விக்கான அணுகுமுறை

**திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்**
பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி




**“சிந்தனை இல்லாத கல்வியும்
கல்வி இல்லாத சிந்தனையும் பயனற்றது.”**

**“நம்மையும் நாம் வாழும் சமுதாயத்தையும் திருத்தியமைப்பதற்குரிய செயற்பாடு கல்வியாகும். குறித்த காலத்திற்குரிய கல்விமுறை அக்காலத்திற்கு ஏற்றதாக இருக்கவேண்டும்.”**

- சேர் றிச்சாட் லிவிங்ஸ்ரன் -

**“தெரிந்தவற்றுள் மட்டும் வாழ்ந்துகொண்டிருக்கும் எல்லைகளின் உடைப்புக்குரிய ஆக்கங்கள் வெளி-வரத்தொடங்கியுள்ளமை வலிதான எதிரொலிப்புக்களை, அறிவுத்தரமேம்பாட்டை நோக்கி மாணவரை உந்திவிடும் வலுவை உருவாக்கும் என்பதை மனங்கொள்ள வேண்டியுள்ளது.”**

- பேராசிரியர் சபா ஜெயராசா -

மேற்படி அறிஞர்களின் கூற்றுக்களுக்கு ஏற்ப மாற்றம் என்பது அவசியமானது. அம்மாற்றங்கள் கல்வியினூடாகவே இடம்பெறவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மாற்றுக்கருத்துக்களும், விமரிசன சிந்தனைகளும் ஆரோக்கியமான விளைவுகளை ஏற்படுத்துமென எதிர்பாக்கப்படுகின்றது. காலத்தின் தேவைகள் சமகாலப் பதிவுகள் தெளிவாக இதனை தெளிவாக எமக்கு எடுத்தியம்புகின்றன. அறிவு ரீதியான தேடல்கள் அதிகமாகக் காணப்பட்ட போதிலும் பண்புரீதியான, மனப்பாங்குரீதியான வாழ்க்கைப்பரீட்சயங்கள் நலிவடைந்து வருகின்றமை பலராலும் சுட்டிக்காட்டப்படுகின்றது. மாணவர்களை அறிவைப்பெறுபவராக மட்டும் நோக்காமல் பெற்ற அறிவைப் பயன்படுத்தி புதிய அறிவாற்றலை வளர்த்துக்கொள்வதற்கான திறன்விருத்தி முக்கியமாகக் கருதப்படுகின்றது. அறிவை அனுபவமாக்கல் என்னும் பொறிமுறை தொடர்பான நுட்பமுறைகள் இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றது. வெறு-மனே இதனை ஆசிரியர், மாணவர் என்போருக்கு மட்டுமென எல்லைப்படுத்தாமல் இதுபற்றிய சமகால வேண்டத்தகாத பதிவுகளை மாற்றியமைக்க வேண்டிய பொறுப்பு நம்முன் குறிப்பாக பாடசாலை- ஆசிரியர் - மாணவர் - பெற்றோர், மற்றும் நலன்விரும்பிகளிடமும் மற்றும் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்ற பொதுசன ஊடகங்களின் முன்னாலும் பரவிக்கிடக்கின்றது.

## அறிமுகம்:

நவீன கல்விக்கோட்பாடுகள் ஞாபகப்படுத்தல் கலாசாரத்திலிருந்து பிரச்சினை தீர்த்தல், பகுத்தாராய்தல், மதிப்பிடுதல் போன்ற அறிவுமைய பொருளாதாரத்திற்கு (knowledge-based Economy) ஏற்றவகையில் நிலைமாற்றம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. கற்பவர் தமக்கிடையேயும், ஆசிரியர்களுடனும் வினாக்கேட்டு, கலந்துரையாடி, சவால்ளை ஏற்படுத்தி தொடர்பாடலை மேற்கொள்ளச் சந்தர்ப்பங்களை எற்படுத்திக்கொடுத்தல் வேண்டும். அதாவது கற்றலானது சுய செயல் முயற்சிகளிலும், சமூக இடைவினைச் செயற்பாடுகளிலுமே தங்கியுள்ளது இங்கு முக்கியமானதாகும். மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் தகவல்களை பெரும்பாலும் அனுபவமாக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. இது மாணவரின் சிந்தனைக்கு இட்டுச்செல்லும். சிந்தனையின் வாயிலாக பெரிய பெரிய விஞ்ஞானிகள் உருவாகியது வரலாறு. மரத்தில் இருந்து பழம் கீழே விழுவது இயற்கை. நியூட்டன் என்ற சிறுவன் அப்பிள் பழம் கீழே விழுவதை அவதானித்தான். ஏன் கீழே விழவேண்டுமென்ற கேள்விக்கு விடை பெறமுடியாது அதுபற்றி சிந்தித்தபோது புவிக்கு ஈர்ப்பு சக்தி எண்டு என கண்டுபிடிக்கப்பட்டது. அவ்வாறே கேற்றலில் நீர் கொதிக்கும் போது அதன் மூடி ஆடியது . அது ஏன் ஆடுகிறது என்பது பற்றி சிந்தித்த "ஜேம்டஸ் வாட்" என்ற சிறுவன் நீராவிக்குள்ள சக்திபற்றி கண்டறிந்தான். மனித சமுதாயத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகள் பற்றி கார்ல்மார்க்ஸ் சிந்தித்த போது கம்யூனிசம் உருவாயிற்று. தொலைதூரத்திலுள்ள மனிதர்களுடன் தொடர்புகொள்வதற்கான வழிபற்றிய கிரகம் பெல்லின் சிந்தனையினால் தொலைபேசி உருவாயிற்று. இவ்வாறே பல கண்டுபிடிப்புக்களுக்கும் அடிப்படையானது சிந்தனை யாகும். மனிதர்கள் வித்தியாசமாக சிந்திக்கும் போதெல்லாம் மாற்றங்கள் நிகழ்ந்திருப்பதற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. எனவே சிந்தனை என்பது மனிதப்பண்பு என்றாலும் அதனை வழிப்படுத்தி அனுபவமாக்க பயிற்சிப்படுத்த வேண்டிய பொறுப்பு கல்வி வழங்குவோரிடமும் பெற்றோரிடமும் காணப்படுகின்றது.

## 1. சிந்தனை – ஒழுங்கு

சிந்தனைகளை ஒருமுகப்படுத்தல் தொடர்பாக கலாநிதி. எட்வேட் டீ பொனோ ஆறு சிந்தனைத் தொப்பிகள் (Six Thinking hats) என்னும் நூலில் விளக்கியுள்ளார். அவர் அதில் ஆறுவகையான சிந்தனைகளை ஆறு நிறத் தொப்பியுடன் தொடர்புபடுத்தியுள்ளளார். மாணவர்களை குழுநிலையில் சிந்திக்கவைப்பதற்கும், திசைமுகப்படுத்து வதற்கும் இது ஒரு உபாயமாகக் கருதப்படுகின்றது. அதாவது திட்டமிடப்படாத சிந்தனைக்கோலம் இலக்கை அடைவதற்கு தவறிவிடுகின்றது. அதாவது சிந்தனை என்பது நடுநிலை, உணர்வு, எதிர், நேர், விமர்சன ரீதியில் என்ற படிமுறைகளினூடு அல்லது சமாந்தரமாக அமைய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

தொடரும்...

# போன மச்சான் திரும்பி வந்தான்...

- ம.நிரேஸ்குமார் -



“போன மச்சான் திரும்பி வந்தான் பூமணத்தோட...” என்று கிராமப் பேச்சு வழக்கில் நையாண்டியாகச் சொல்வார்கள்.

அப்படித் திரும்பி வந்த ஒரு மச்சான்தான் இந்த அரிக்கன் லாம்பு!

மண்ணெய்யில் எரியக் கூடியது...

மண்ணென்ணையை அளவாகத் தான் எடுக்கும்...

மண்ணெண்ணையும் மட்டுமே...!

வெட்கம், சூடு, சுரணை எதுவும் கிடையாது...

என்னைத் தூக்கி எறிந்தார்களே...! என்ற சங்கோஜப்படாது...

எத்தனை முறை தூக்கி எறிந்தாலும், திரும்பக் கொழுத்தினால் எரியும்!

இப்போது கொழுத்துகிறார்கள்...

மீண்டும் தூக்கி எறிவார்கள்...!

அளவான வெளிச்சத்தைத் தான் தரும்...

ஒரு அளவுக்கு மேல் ‘கூட்டினால்’ வெளிச்சத்தைத் தராது... புகையைத் தான் தரும்...

கடும் காற்றிலும் நூர மாட்டாது...

பயப்படாமல் வெளியிலும் கொண்டு திரிய முடியும்...

தேவைப்படாத போது தூக்கி எறிந்தாலும் உக்கிப் போக மாட்டாது...

எப்போது தூக்கிக் கொழுத்தினாலும் வெளிச்சம் தரும்!

இதற்குத் தேவை ஒரு திரியும் கொஞ்சம்

தேவைப்பட்டால் திரும்பவும் கொழுத்துவார்கள்...!

இது திரும்பவும் எரியும்...


இதற்குத்தான் வெட்கம், சூடு, சுரணை எதுவும் கிடையாதே...

நான் அரிக்கன் லாம்பைப் பற்றி மட்டுத்தான் சொல்கிறேன்.

நீங்கள் இதனை வேறு யாருடனும் பொருத்திப் பார்த்தால் அதற்கு நான் பொறுப்பாளியல்ல...!

# வீரர்கள் வருவார்கள் விளையாட

- சிவ.இராஜேந்திரன் -




“கோவிக்காத நல்லா கேள்விய தானே இவரு... கேட்டாரு.. அழுகை கோச்சியில் நம்ம மக்கள் இந்தியாவுக்கு போன கதைகள் பல இருக்கு... இப்ப கிரவுண்டு கதய கேளுங்க... அந்த காலத்துல தொழிற்சங்கமுனா அப்புடி இருக்கும். இப்பதானே திருட்டுப் பயலுக எல்லாம் தலவரா இருக்கிறானுங்க.. அந்த காலத்துல.... நம்ம தோட்டத்துல.. செங்கொடி சங்கமுனு.. ஒன்னு இருந்திச்சி... தலைவரு சாமுவேல் ரத்தினம்... நெருப்பு மாதிரி இருப்பாரு... இளம் பொடியங்க எல்லாம் வொலிபோல் கிரவுண்டு ஒன்னு வேணுமினு... தொரகிட்ட கேட்டு... மாரியம்மா கோயிலுக்குக் கீழ உள்ள எடத்த கேட்டு வாங்கி தரச் சொல்லி கேட்டாங்க. அந்த எடம் சும்மா தான் கெடந்திச்சி”

“எடம்... குடுத்து இருக்க மாட்டானே...” எல்லோரும் ஒரே நேரத்தில் சொன்னார்கள்.

“அது எப்படி சரியா சொல்லுறீங்க...” தாத்தா வியப்படைந்தார்.

“இன்னக்கி ஸ்கூல் கட்டவே எடம் தர மாட்டேனு நம்ம தோட்டத் தொர சொல்லுறான். அந்த காலத்துல கிரவுண்டுக்கு எடம் குடுத்திருப்பானா தாத்தா” தலையை ஆட்டிய படியே ரஞ்சன் கேட்டான்.

“அந்த காலத்துல இருந்த தொர... பண்டி மாதிரி ஊதி போய் இருப்பான்... ரக்கரு... வெளயாட... டிக்கோயா தரவாளைக்கு போவான்.. பச்ச இனவாதி... ஒரு இஞ்சி எடம் கூட குடுக்கு முடியாதுன்னு சொல்லிப்புட்டான். எத்தனையோ முறை கேட்டுப் பார்த்துட்டாங்க. அவன் எறங்கி வரவே இல்ல...”

“அப்பறம் என்னா நடந்திச்சி தாத்தா...”

“ஆளுக எல்லாம் ஒன்னா கூடி ஒரு முடிவு எடுத்துப்புட்டாங்க. கிரவுண்டு கேட்டு ஸ்ட்ரைக் பண்ணுறது... மலையெல்லாம் இதே பேச்சி தான்... தொழிலாளர்கள் காட்டிக் குடுக்கிற... சின்ன... சங்கம் ஒன்னும் இருந்திச்சி. அவனுங்களும் ஒத்துமயா வந்துட்டாங்க...”

“தொழிலாளர்கள் காட்டிக் குடுக்கிறவனுங்க இப்பயும்... இருக்குறானுங்க தானே... தாத்தா.. இன்னும் திருந்தலியே..” கை விரல்களை ஆட்டியபடியே சொன்னான் பிரியன்.

“அடேங்கப்பா.. ஒனக்கு நெறைய விசயம் தெரியிதே…” தாத்தா ஆச்சரியப்பட்டார்.

“மதியழகன்னு சொல்லி எங்க சேரு... ஒருத்தர் இருக்குறாரு தாத்தா.. நெறைய விசயம் சொல்லி குடுப்பாரு.. அவர கூட முந்தி ஒரு முறை பயங்கரவாதின்னு சொல்லி புடிச்சிக்கிட்டு போனாங்களாம்... நம்ம ஆளுகவுட்டு வரலாற அப்புடியே கரைச்சி குடிச்சவரு. கதை மாதிரி பல விசயங்கள் சொல்லிக் குடுப்பாரு”

“ஒரு நாளைக்கி கூட்டிக்கிட்டு வா... இந்த காலத்துல இப்படியும் ஒரு சேரு.. இருக்கிறாரா? ஆச்சரியமா இருக்குதே?.... எனக்குனா நம்ப முடியல அப்புடி ஒருத்தரு இருந்தா சந்தோசம் தான். சரி கதைய கேளுங்க கிரவுண்டு கேட்டு ஒரு.. கெழமயா வேலை நிறுத்தம்... ஸ்டரைக். நாங்க எல்லாம் சின்ன ஆளுக.... என்னா நடக்குதுன்னு பார்த்துக்கிட்டு இருந்தோம்…”

“நல்லா டீ.வி பார்த்திருப்பீங்களே…” பிரசாத்தும் ரஞ்சனும் ஒரே நேரத்தில் கேட்டார்கள்.

“அந்த காலத்துல இந்த டீ.வி தரித்திரம் எல்லாம் இல்ல பேராண்டிகளா நாடகம்... பஜனை... மாடு, ஆடு வளர்க்கிறது... வெறகுக்குப் போறது.. “கொந்தரப்பு” எடுத்து பில்லு வெட்டுறது. இப்புடி தான்.. நேரமே இருக்காது...

ஸ்ட்ரைக் தொடர்ந்து நடந்திச்சி... தொர எறங்கி வரவே மாட்டேனுட்டான். அடுத்த வாரம்..... ஒரு செவ்வா கெழம்... பொலிஸ்காரனுங்க வந்து.. ரத்திணத்தையும்... மத்த சங்க தலவரு.. ஆறுமுகத்தையும் புடிச்சிக் கிட்டு போயிட்டானுங்க...”

“பெரிய அநியாயமா இருக்கே... தாத்தா... நாசமா போனவனுங்க... அந்த காலத்திலயும் பெரிய “அக்குரும்பு” பண்ணி இருக்குறானுங்க... அப்பறம் என்னா நடந்திச்சி” பொடியன்களுக்கு கோபம் மேலிட்டதை காண முடிந்தது.

“தோட்டத்துல கொழப்பம் பண்ணுனது... நிருவாகத்த கெடுத்தது... மக்கள் ஸ்ட்ரைக் செய்ய சொல்லி தூண்டியது... என்று சொல்லி வழக்குப் போட்டுடானுங்க…” நீண்ட பெரு மூச்சு விட்டார் தாத்தா. தொழிலாளியின் கஸ்டம் தொழிலாளிக்குத்தானே தெரியும்.

“நீதி... கெடைச்சிச்சா தாத்தா…”

தாத்தா நீண்டதொரு சிரிப்பு சிரித்தார்.

“சொல்லிப்புட்டு சிரிங்க தாத்தா…” என்றான் கிருசாந்தன்


“தங்கங்களா.. தோட்டத் தொழிலாளிக்கு என்னக்கிடா நீதி கெடைச்சிச்சி... முல்லோயா தோட்டத்துல கோவிந்தன சுட்ட கதை சொல்லி இருக்கிறேன். நீதி கெடைச்சிச்சா. டெவனுல் லட்சுமணன் தலவாக்லையில் காராளன் மணிவண்ணன்... எத்தன பேர சுட்டுக் கொன்னானுங்க” மீண்டும் நீண்ட பெரு மூச்சு விட்டார் தாத்தா. கொஞ்ச நேரம் கதையை நிறுத்தினார். வெத்திலை போட்டார். பயலுகளும் இரண்டாவது முறுக்கின் கடைசித் துண்டை கறுக்கு முறுக்கு” என கடித்தார்கள். சிறிது நேர அமைதியின் பின்னர் கதை தொடர்ந்தது.

“நம்ம தோட்டத்துக்கு ஆதரவா மத்த தோட்டங்களும் ஸ்டரைக்... தலவருமார விடுதலை செய்ய சொல்லி பெரிய போராட்டம்... அவுங்களும் கிரவுண்டு கேட்டாங்க... போராட்டம் தீவிரமடைஞ்சிருச்சி…”

**தொடரும்...**

# படித்ததில் பிடித்தது...!

- ம.நிரேஸ்குமார் -




*"கட்டுருவாக்கவாதம்" என்னும் நூலானது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி திரு.சு.பரமானந்தம் அவர்களினால் எழுதப்பட்டு சேமமடு பொத்தகசாலையினால் 2019ம் ஆண்டு, திருத்திய இரண்டாவது பதிப்பாக வெளிவந்துள்ளது.*

ஏற்கனவே முதலாம் பதிப்பாக வெளிவந்த வேளையில் கல்விப் புலத்தைச் சேர்ந்த பலராலும் பெரிதும் பாராட்டி வரவேற்கப்பட்ட இந்நூலானது இரண்டாம் பதிப்பாக வெளிவந்து கல்விப் புலத்திற்கு, குறிப்பாகத் தேடற் பசியுள்ள ஆசிரியர்களுக்கு தீனி போடு வதாக அமைந்துள்ளது.

நூலில் அமைந்துள்ள ஆசியுரை, வாழ்த்துரை, அணிந்துரை, என்னுரை முதலான விடயங்கள் இந்நூலினை வாசிப்பதற்கான ஆர்வத்தைத் தூண்டு கின்றன. பதினான்கு கட்டுரைகளும், எட்டு மாதிரிச் செயற்பாட்டுத் திட்டங் களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. நிறைவாக, கட்டுருவாக்கம் தொடர்பாக இணைக்கப்பட்டுள்ள எண்ணக்கரு வரை படங்கள் இந்நூலின் தரத்தை இன்னொரு படிக்கு உயர்த்தி நிற்கின்றன.

இந் நூலினது ஆசிரியர் திரு. சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்கள் உண்மையிலேயே பாராட்டப் பட வேண்டியவர். அவரது முன்னுரையை வாசித்த வேளையில் இந்நூலை வெளிக் கொணருவதற்கான அவரது அயராத உழைப்பையும், முயற்சிகளை யும் அறிய முடிந்தது. எனது விழிகளில் ஏற்பட்ட வியப்பு நீங்காமலே இக் குறிப்பை எழுதியிருக் கின்றேன்.

ஒவ்வொரு கட்டுரையையும் தனித் தனியாக வாசிக்கும் போதும் பொருள் விளங்கத் தக்கதாக அமைந்துள்ளன. ஒட்டு மொத்தமாகச் சேர்த்து வாசிக்கின்ற போது கட்டுருவாக்கத்தின் பெருந்திரளினை எமது மூளைப் பகுதியில் உணர முடிகின்றது. கல்விப் புலத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டிய அருமையான ஒரு பொக்கிஷமாகவே இந்நூலினை நான் காண்கின்றேன்.

# "இன்பா"வின் சிந்தனைத் தொடர் – 06

## கதைகளால் நியமாகி...

## உங்கள் எண்ணங்கள் தான் உங்கள் பார்வை



*ஆசிரியை அதிபரிடம் வந்து பதட்டத்தோடும் கோபத்தோடும் "என்னுடைய கைப் பையில் இருந்த ஆயிரம் ரூபாவை ரகு திருடிவிட்டான்." என்று படபடத்தார். அதிபர் அவரை அமைதிப்படுத்தி, "ரகுதான் எடுத்தான் என்பதற்கு என்ன ஆதாரம்" என்று கேட்டார். வகுப்பில் நடக்கும் எல்லா குழறுபடிக்கும் திருட்டுக்கும் அவன்தான் காரணம் என்று கூறிக்கொண்டு இருக்கும் போது ஆசிரியையின் மாமனார் "பிள்ளை நீ! காசை மேசையில் வைத்துவிட்டு மறந்து போய் வந்துவிட்டாய்." என்று ஆயிரம் ரூபாவை நீட்ட, ஆசிரியை வெட்கி தலைகுனிய அதிபர் ஆசிரியைக்கு இந்தக் கதையை சொன்னார்.*

மரங்களை வெட்டிவந்து விறகாக்கி விற்று பிழைப்பு நடத்துபவன் அவன். ஒரு நாள் காலையில் வழக்கம் போல எழுந்து விறகு மண்டிக்கு போனவன் திகைத்து நின்றான். அங்கு வைத்திருந்த அவனது ராசியான கோடரியைக் காணவில்லை.



"எப்போதும் வைக்கும் இடத்தில் தானே நேற்றும் வைத்தேன்." என்று மீண்டும் மீண்டும் தேடிப் பார்த்தான் அவன். அப்போது பக்கத்து வீட்டு சிறுவன் தோட்டத்தில் நின்றிருப்பது இவன் கண்ணில் பட்டது. மரம்வெட்டிக்கு அந்த சிறுவன் மீது சந்தேகம் வந்தது.

"அவன் தோட்டத்தில் நின்றபடியே என்னையே நோட்டம் விடுகிறான். அவன் பார்வையில் கள்ளத்தனம் தெரிகிறது, படபடப்பை மறைக்க அவன் கைகளை பைக்கட்டில் விட்டிருக்கிறான், கூர்து பார்த்தால் பயத்தில் அவன் கால்கள் நடுங்குவதுகூடத் தெரிகிறது. மாட்டிக் கொள்வோமோ என்ற பயம் அவன் முகத்தில் தெரிகிறது. சந்தேக மில்லை என் கோடரியை திருடியது அவன்தான்." என முடிவு செய்தான் மரம் வெட்டி.





“ஆனால் ஆதாரமில்லாமல் அவனைக் கேட்கமுடியாதே? அவன் அப்பா மிகமோசமான ஆள் சும்மாவே வம்புச் சண்டைக்கு வருகிறவன், இதைக் கேட்கப்போய் உடம்பு புண்ணாகிவிட்டால் சரி இனியாவது ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.” என முடிவு செய்தான்.

அதன்பின் வந்த நாட்களில் பக்கத்து வீட்டுப் பையனைப் பார்த்போது அவன் திருடனாகவே தெரிந்தான். சில நாட்கள் கழித்து விறகு மண்டியை துப்பரவு செய்தபோது விறகு களுக்குள் சிக்கியிருந்த கோடரி கண்ணில் பட்டது.

தன் கவனக்குறைவால் பக்கத்து வீட்டுப் பையனைத் திருடனாக கருதினோமே என அவன் வருந்தினான்.

இப்போது பக்கத்து வீட்டு தோட்டத்தில் அந்தப் பையனை பார்க்க முடிந்தது. அவன் முன்பு போலவே நின்றிருந்தான். மரம் வெட்டியை பார்த்து சிரித்தான். அவன் பார்வையில் குழந்தைத்தனம் தெரிந்தது. ஸ்டைலாக பைக்கற்றில் கைகளை விட்டபடி கால்களை ஆட்டிக் கொண்டு நின்றிருந்தான். அவன் களங்கமில்லாமல் சிரிப்துபோல் மரம் வெட்டிக்கு தோன்றியது.



கதையைக் கேட்ட ஆசிரியைக்கு தன்தவறு புரிந்தது.


**நீதி : பார்க்கும் விஷயங்களில் கோளாறு இல்லை பார்வையில்தான் இருக்கிறது**

**அடுத்த இதழில் தொடரும்...**

# சோசலிஷம் எதற்காக?

## (ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்)

தமிழாக்கம்: சிவலிங்கம் மு



2

மனித சமுதாயம் ஒரு நெருக்கடிக்கு ஆளாகியுள்ளது, அதன் நிலைப்புத் தன்மை மிக மோசமாக ஆட்டம் கண்டுள்ளது என்று அண்மைக் காலமாக எண்ணற்ற குரல்கள் ஒலிக்கத் தொடங்கியுள்ளன.

இத்தகைய சூழலில் தனிமனிதர்கள் தாம் சார்ந்த குழுவின்பால் - அது சிறிதாயினும் அல்லது பெரிதாயினும் - வெறுப்பும், பகைமையும் காட்டுவது இயல்பாய் உள்ளது. என்னுடைய கருத்தை விளக்கும் பொருட்டு என்னுடைய சொந்த அனுபவம் ஒன்றை இங்குப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

நான் அண்மையில், அறிவாளியான சிறந்த அந்தஸ்தில் உள்ள ஒருவருடன், இன்னொரு போர் வருவதற்கான அபாயம் குறித்து விவாதித்துக் கொண்டிருந்தேன்.

என்னுடைய கருத்தில் இன்னொரு போர் என்பது மனிதகுலத்தின் இருப்புக்கே மிக மோசமான ஆபத்தினை விளைவிக்கும். தேசங்களுக்கு அப்பாற்பட்ட அமைப்பு ஒன்றினால் மட்டுமே இந்த ஆபத்திலிருந்து மனிதகுலத்தைக் காப்பாற்ற முடியும் என்று அவரிடம் கூறினேன். அதற்கு அந்த மனிதர் மிகவும் அமைதியாக, நிதானமாக என்னிடம் சொன்னார். ”மனித இனம் அழிந்து போவதை இவ்வளவு ஆழமாக எதற்காக நீங்கள் எதிர்க்கிறீர்கள்?”

ஒரு நூற்றாண்டு அளவிலான மிகக் குறுகிய காலத்துக்கு முன்னால் இதைப் போன்ற ஒரு கூற்றை இவ்வளவு அக்கறையின்றி எவரும் கூறியிருக்க முடியாது என என்னால் நிச்சயமாகக் கூற முடியும். தனக்குள்ளேயே ஒரு சமநிலைத் தன்மையை அடைவதற்கு வீணே போராடி, ஏறத்தாழ வெற்றி பெறுவதில் நம்பிக்கையை இழந்துவிட்ட ஒரு மனிதனின் கூற்றாகும் இது. வலிமிகுந்த தனிமையில் தனித்து ஒதுக்கப்பட்ட ஒருவரின் மன வெளிப்பாடு என்றே கொள்ள வேண்டும். இதற்குக் காரணம் யாது? இதிலிருந்து மீள்வதற்கு வழியுண்டா?

இத்தகைய கேள்விகளை எழுப்புவது எளிது. ஆனால், அக்கேள்விகளுக்கு ஓரளவுக்கேனும் நம்பிக்கையுடன் விடையளிப்பது கடினம். நமது உணர்வுகளும் முயற்சிகளும் எப்போதுமே முரண்பட்டும் தெளிவற்றும் உள்ளன.

அவற்றை எளிய, சாதாரணச் சூத்திரங்களில் விளக்கிவிட முடியாது. இந்த உண்மையை நான் நன்கு அறிந்துள்ள போதிலும், என்னால் முடிந்த அளவுக்கு மேற்கண்ட கேள்விகளுக்குப் பதில்கூற முயல்கிறேன்.

மனிதன் என்பவன் ஒரே நேரத்தில் தனிமனிதனாகவும் சமூக மனிதனாகவும் இருக்கிறான். தனிமனிதன் என்ற நிலையில், அவன் தன் சொந்த விருப்பங்களைத் திருப்திப்படுத்தும் பொருட்டும், தன் உள்ளார்ந்த திறமைகளை வளர்த்துக் கொள்ளும் பொருட்டும், அவனுடைய வாழ்க்கையையும் அவனுக்கு மிகவும் நெருக்கமாக உள்ளவர்களின் வாழ்க்கையையும் பாதுகாத்துக் கொள்ள முயல்கிறான். சமூக மனிதன் என்ற நிலையில், அவனுடன் வாழும் மனிதர்களின் அங்கீகாரத்தையும் அன்பையும் பெறவும், அவர்களுடைய மகிழ்ச்சிகளைப் பகிர்ந்து கொள்ளவும், அவர்களுடைய துயரத்தில் பங்கு கொள்ளவும், அவர்களுடைய வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்தவும் விரும்புகிறான்.

இத்தகைய, வேறுபட்ட, அடிக்கடி மோதிக் கொள்ளும் முயற்சிகள் இருப்பதே ஒரு மனிதனின் தனிச்சிறப்பான பண்புக்குக் காரணமாக அமைகிறது. இவற்றின் குறிப்பிட்ட சேர்க்கையே ஒரு தனிமனிதன் எந்த அளவுக்கு அகச் சமன்நிலையை அடைய முடியும்,

சமுதாயத்தின் நலனுக்குப் பங்காற்ற முடியும் என்பதைத் தீர்மானிக்கிறது. இந்த இருவேறு உந்து சக்திகளின் ஒப்பீட்டுப் பலம், பிரதானமாக மரபு வழியில் நிர்ணயிக்கப்படுவது சாத்தியமே. ஆனால், ஒரு மனிதனில் முடிவாக வெளிப்படும் ஆளுமை, அவனுடைய வளர்ச்சியின்போது அவன் வாழ நேர்ந்த சூழல், அவன் வளர்ந்த சமுதாயத்தின் கட்டமைப்பு, அந்த சமுதாயத்தின் மரபு, அந்தச் சமுதாயம் குறிப்பிட்டவகை நடத்தை பற்றிக் கொண்டுள்ள மதிப்பீடு ஆகியவற்றாலேயே பெருமளவு உருவாக்கப்படுகின்றது.

தனிமனிதனைப் பொறுத்தவரை “சமுதாயம்” என்கிற அருவமான கருத்துருவின் (Abstract concept) பொருள், அவனது சமகால மனிதர்களோடும், முந்தைய தலைமுறைகளின் அனைத்து மக்களோடும் அவன் கொண்டுள்ள நேரடியான மற்றும் மறைமுகமான உறவுகளின் ஒட்டு மொத்தத்தையே குறிக்கிறது. ஒரு தனிமனிதர் தானாகவே சிந்திக்க, உணர, முயல, வேலை செய்ய இயலும் ஆனால், அவருடைய உடல் ரீதியான, அறிவு ரீதியான, உணர்வு ரீதியான வாழ்க்கையில் அவர் சமுதாயத்தின் மீது வெகுவாகச் சார்ந்திருக்க வேண்டியுள்ளது.

சமுதாயம் என்னும் கட்டமைப்புக்கு வெளியே அவர் தன்னைப் பற்றிச் சிந்திக்கவோ, தன்னைப் புரிந்து கொள்ளவோ இயலாது. சமுதாயமே மனிதனுக்கு உணவு, உடை, உறையுள், வேலைக்கான கருவிகள், மொழி, சிந்தனையின் வடிவங்கள், சிந்தனையின் பெரும்பாலான உள்ளடக்கம் ஆகியவற்றை வழங்குகிறது. “சமுதாயம்” என்னும் சிறிய சொல்லின் பின்னால் மறைந்துள்ள, இக்காலத்து மற்றும் கடந்த காலத்து மக்கள் பலகோடிப் பேரின் உழைப்பின் மூலமாகவும், செயல்பாடுகளின் மூலமாகவுமே மனிதனின் வாழ்க்கை சாத்தியமாகியுள்ளது.

எனவே, தனிமனிதன் சமுதாயத்தின் மீது சார்ந்துள்ள தன்மையானது இயற்கையின் உண்மை என்பது வெளிப்படையாகும். எறும்புகள், தேனீக்கள் வி'யத்தில் நடந்ததைப் போல இந்த உண்மையை அழித்துவிட முடியாது.

தொடரும்...



# நூலகம் அன்றும் இன்றும்..

ப.நிதுசா - ஆரம்ப பிரிவு (B)

உலகளாவிய ரீதியிலே கோவில்கள் எவ்வாறு ஒரு இடத்திற்கு அவசியமோ அதே போல தான் நூலகங்களும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. நூலகம் என்பது ஒரு புனிதமான எல்லோராலும் மதித்து பாதுகாக்க வேண்டிய இடமாக காணப்படுகிறது. நூலகம் என்பது ஆரம்ப காலத்தில் தோற்றம் பெற்ற ஒன்றாக காணப்படுகிறது. ஆரம்ப காலங்களில் எந்த ஒரு தகவல்களை பெற வேண்டுமானாலும் நூலகம் சென்று அங்கே உள்ள அறிவுசார் நூல்களில் இருந்தே பெற்றுக் கொண்டு தமது அறிவை வளர்த்துக் கொள்வார்கள் . தற்போது நூலகத்தைப் பயன்படுத்துவோர் மிகவும் குறைவா-கவே உள்ளது ஏனென்றால் தற்காலம் நவீன தொழில்நுட்ப காலமாக மாறுவதால் அதிகமானோர் நூலகம் செல்வதில்லை. தொழில்நுட்ப சாதனங்களை பயன்படுத்தி தகவல்களை தருகின்றன தகவல்களைத் பெறுகின்றனர். அதனாலேயே நூலகம் என்ற ஒன்றே மருகிவருகின்றது.

எனவே நூலகம் என்பது சான்றோர்கள் நமக்களித்த சொத்து அதனை பாதுகாக்க வேண்டியதும் சரியான முறையில் அடுத்த சந்ததியினருக்கு கையளிப்பதிலும் கவனம் செலுத்தவேண்டும். நூலகத்தை ஒருவன் நல்லதாக பயன்படுத்துவோனானால் நிச்சயமாக அவன் வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பான். நாம் எவ்வளவு நூல்களை தேடி வாசிக்கின்றோமோ அவ்வளது அறிவு வளரும் இதனையே "வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்" என்றார் அறிஞர் ஒருவர். தொடர்ந்து நாம் வாசிப்பு அறிவைப் பெற்றிருக்கும் போது எந்த சந்தர்ப்பத்திலும் எப்போதுமே ஒரு நன்மதிப்புள்ள அறிவாற்றல் உள்ளவராக திகழ முடியும். நாம் கல்வி கற்கும் வேளையிலும் எமக்கு துணை நிற்பது நூலகமும் அதனுள் இருக்கும் நூல்களேயாகும்.

நாம்தான் நூலகத்தை தேடிச் செல்லவேண்டும். "தேன் இருக்கும் இடத்தினை தேடிச் செல்லும் வண்டு போல" நாமும் நூல்கள் உள்ள இடத்தினை தேடி செல்ல வேண்டும். எவ்வளவுதான் தொடர்பாடல் சாதனங்கள் தோற்றம் பெற்றாலும் , நாம் தகவல்களை பெற்றாலும், நான் நூலகத்தில் இருந்து பெறும் தகவல்களை கற்கும் போது நமக்குள் அறிவாற்றல் அதிகமாக வளரும் என்பதே உண்மையாகும். " காதலின் கையைப்பிடித்து திரிவதை விட நூலகத்தின் கைகளை பிடித்து திரிந்தால் வாழ்க்கை சொர்க்கமாகும்" என்று கூறுவார்கள். நூலகம் நம்மால் ஒழுங்காக பேணப்படவேண்டும். நூலகத்தின் உள்ளே சென்றால் நாம் எவ்வாறு இருக்க வேண்டும். எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும். என்றெல்லாம் நடைமுறைகள் உள்ளன. அதன்படி ஒழுக வேண்டும்.

தொடர்ந்து எவ்வளவு பெரிய குற்றம் செய்து தண்டனை பெற்றவனாக இருந்தாலும் நூலக வாசலில் காலடி எடுத்து வைத்தவுடன் அவனது வாழ்க்கையையே நூலகம் மாற்றி விடும் என்பதே உண்மை. நூலகம் சென்று நூல்களைக் கற்பதை தொடர்ச்சியாக மேற்கொண்டால் நிச்சயமாக நாளுக்கு நாள் ஒரு புதிய தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும். நாம் இன்று தொடர்பாடல் சாதனங்களை பயன்படுத்தி தகவல்களை பெறுகின்றோம் என்றால் நிச்சயமாக நாம் முழுமையான தகவல்களை பெற முடியாது. எனவே அன்றைய நிலையை நாம் இன்றும் கொண்டு வர வேண்டும் நூலகம் செல்ல வேண்டும் தேடி கற்க வேண்டும். நூலகத்தை முழுமையாக பயன்படுத்தினால் நுண்ணறிவை நாம் பெற முடியும்.

**"முத்தான புத்திமதி தேவையானால் நூலகத்தில் நாடி செல்"**

குருசேத்திரம்
சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...




# விடியல்

ப. சுதர்சிகா - நடனத்துறை.

*சூரியன் தன் பொற்கதிர்களைப் பரப்பிக் கொண்டு மேலெழுந்தான். அக்காட்சி கண்ணைக் கவர்ந்தது. ‘வளர்மதி..வளர்மதி எழும்பும்மா’ என்றாள் அவளின் தாய் சாந்தி.*

ஆம் சாந்திக்கு ஒரே ஒரு பிள்ளை, கணவனை இழந்து மகளுக்காக வாழ்கிறாள். எப்படியாவது மகளை நல்ல ஒரு நிலைக்கு கொண்டு வரவேண்டும் என்பதே அவளின் கனவு, இலட்சியமாக இருந்தது. ‘அம்மா இந்த கிழிஞ்ச சட்டைய நான் பள்ளிக்கூடத்துக்கு போட்டு போனால் குமாரி கேலி செய்வா அம்மா’ என்றாள். வளர்மதி’ ‘அம்மா மதி கொஞ்சம் நீ சமாளி இப்ப என் கையில் காசு இல்லம்மா, இன்னும் சம்பளம் தரவில்லை. பத்தாம் தேதிக்கு பிறகு நான் புது சட்டை வாங்கித் தாரேன்’ என்றாள் சாந்தி.

அம்மாவின் கஸ்டங்களை உணர்ந்தவள் மதி. அமைதியாக வீட்டை விட்டு வெளியேறினாள். மதி சென்றதும் சாந்தியும் வேலைக்குச் சென்றுவிட்டாள். அவளின் எண்ணம் ‘நமக்கு உடம்பு முடியல வயதாகிட்டு, அவளை படிக்க வைக்கனும் மாதம் மாதம் மருந்து எடுக்கனும். அவரும் இல்ல இப்போ நான் ஒருத்தியாக இருந்து அவளை எப்படி கரை சேர்க்கப் போகிறேன் என்று தெரியவில்லை. நல்ல இடத்துல அவளை கல்யாணம் பண்ணி வச்சதும் கண் மூடிட்டேனா போதும் என்ற பலவாறு நினைத்துக் கொண்டுச் சென்றாள். இவர்களின் வறுமை நிலையை இனியும் சொல்லவா வேண்டும்.

எந்தவித எதிர்பார்ப்புக்களும் அற்ற தாய் நாட்கள் பம்பரமாக சுழன்றோடின. மதியும் உயர்தரத்தில் சிறந்த சித்திகளைப் பெற்று பல்கலைக்கழகம் செல்லும் அளவிற்கு இருந்தாள். ஊரில் உள்ள அனைவரும் அவளைப் பாராட்டினார்கள். சாந்தியை மகிழ்வை யாராலும் சொல்ல முடியாது. சூரியனை கண்டவுடன் செந்தாமரை மகிழ்வது போல அவளை கண்டவுடன் கட்டி அணைத்து முத்தமிட்டாள். ஆனந்த கண்ணீர் பெருகியது… ‘நான் பட்ட கஸ்டங்கள் வீண் போகவில்லை உன் அப்பா சந்தோசப்படுவார்’ எனக் கூறி கொண்டே அழுதாள். சாந்தியின் கணவர் இறந்த அன்று வந்த சுற்றத்தார் இன்று தான் வந்தார்கள். அனைவரையும் உன்றாக வீட்டினுள் அழைக்க முடியவில்லை. குருவிக் கூடு போன்ற சிறிய வீடு.

‘அம்மா இனியும் நான் உங்களுக்கு துன்பம் தர விரும்பவில்லை. நான் படித்தது போதும். நீங்கள் வீட்டில் இருங்க அம்மா நான் வேலைக்குச் செல்கின்றேன்’ என்றாள் மதி. நீ என்ன கதைக்கிற மதி. இவ்வளவு கஸ்டப்பட்டு படிக்க வைத்தது ‘நீ வேலைக்கு போகவா உன்னால் இன்னும் படிக்க முடியும். நம்மை கேவலமாக பார்த்த அனைவரும் மூக்கின் மேல் கை வைக்கும் அளவிற்கு உயர வேண்டும். எனக்காக இல்ல… உங்க அப்பாவை நினை நீ படிக்க வேண்டும்மா’ என்றாள் சாந்தி. தாயின் வார்த்தைக்கு மறுவார்த்தை பேசாமல் அமைதியாகச் சென்றாள். வறுமை கோட்டில் வாழ்பவர்கள் சந்தோசப்பட்டால் இறைவனுக்கு பிடிக்கவில்லை போலும்.

ஆம் அவர்களின் சந்தோசத்தைப் பறிக்க இறைவன் முடிவெடுத்து விட்டான். அன்று மருந்து வாங்குவதற்கு வைத்தியசாலைக்குச் சென்றாள்.

வைத்திய பரிசோதனையின் பின் வைத்தியர் கூறினார்... ‘அம்மா உங்களுடைய புற்றுநோய் அதிகரித்து விட்டது இன்னும் ஆறு மாதமே... மூன்று மாதமோ... எங்களால் உறுதி அளிக்க முடியாது’ எனக் கூறிவிட்டு வெளியே சென்றார். கடவுளுக்கு கண் இல்லை என்பார்கள். இந்த நொடி சாந்தி அதை உணர்ந்தாள். பூமி பிளந்து பாதாளத்திற்குள் விழுவது போல் அவள் திகைத்துப் போனாள். அவளின் எண்ணம் மதியை சுற்றியே வட்டமிட்டது. தாயிற்கு புற்றுநோய் இருப்பதே மதிக்கு தெரியாது. அவளின் தாய், தந்தை, அண்ணா, அக்கா, ஆசான் என அனைத்து உறவும் தாய் மட்டுமே அவளும் இல்லை என்றாள் மதியின் நிலை என்னவாகும். நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. ‘அம்மா... நான் பாஸ் பண்ணதுக்கு ஸ்கூல்ல பாராட்டு விழா செய்றாங்களாம். நீங்கள் கட்டாயம் வர வேண்டும் அம்மா...’ என்றாள் மதி. சாந்தியின் சோகங்களை மறைத்து கொண்டு ‘ம் போவோம். நான் வருகிறேன்’ என்றாள் சாந்தி.

பாராட்டு விழாவில் வளர்மதி பேசினாள் அவள் பேசிய ஒவ்வொரு வார்த்தைகளும் அம்மா... அம்மா... அம்மா... மட்டுமே: அவள் பேசியதை கேட்டதும் அங்கு உள்ள ஆசிரியர்கள், மாணவர்கள், ஏனைய பெற்றோர்கள் அவைரும் அழுது விட்டார்கள். அவர்கள் அனைவரும் அவளைப் பாராட்டினார்கள். சாந்தியின் எதிர்பார்ப்புகளுடன் நாட்கள் நகர்ந்தன. அவள் எதிர்பார்த்தது மதியின் பல்கலைக்கழக அழைப்பு கடிதத்தை, ஆனால் சாந்திக்கு கிடைத்ததோ... காலனின் கையில் உள்ள மரண அழைப்பு கடிதம்.

பல்கலைக்கழக அழைப்பு கடிதத்தை எடுத்துக் கொண்டு மதி அம்மா... என்று அழைத்துக் கொண்டு ஓடோடி வந்தாள். நாலா பக்கமும் அம்மா அம்மா என்று அழைத்து தேடினாள். அம்மாவை காணவில்லை. சமயலறைக்குச் சென்று பார்த்தாள். அம்மா மயங்கி கீழே விழுந்திருந்தாள். கத்தி கூச்சலிட்டு பக்கத்து வீட்டில் உள்ளவர்களை அழைத்தாள். அனைவரும் வந்தார்கள். சாந்தியை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றார்கள். ‘உடலை விட்டு உயிர் பிரிந்து 30 நிமிடங்கள் ஆகிவிட்டன’ என வைத்தியர் கூறினார். மதி அதை கேட்டவுடன் மயங்கி விட்டாள்.

ஊரில் உள்ள அனைவரும் அழுது புலம்பினார்கள். தகப்பனுக்கு தகப்பனாக தாய்க்கு தாயாக இருந்து மதியை வளர்த்தாள். இனி அவளை யார் கவனிப்பதும் யாருமற்ற அநாதையாகி விட்டாளே என ஊரில் உள்ளவர்கள் பேசிக் கொண்டார்கள். தாய் இல்லை என்ற நிலையிலிருந்து அவளால் மீளவே முடியவில்லை. இதில் அவளின் பல்கலைக்கழக அழைப்பு காலமும் நெருங்கி விட்டது. மதி தன்னால் செல்ல முடியாது என்றாள். ஆனால் அவளின் பாடசாலை அதிபர் செலவுகளை நான் பார்த்துக் கொள்கிறேன் நீ சென்று படி என்றார். ஆவள் ‘இல்லை சேர் எனக்கு அம்மா இல்லனு சொல்லுரதே ஏற்றுக்கொள்ள முடியவில்லை நான் படிக்கல சேர்’ என்று விம்மி விம்மி அழுது கொண்டே கூறினாள். ‘இல்லை வளர்மதி உங்கள் அம்மாவின் கனவை நீ நனவாக்க வேண்டும். நீ போம்மா’ என்றார்.

அவர் அதிபரே அதிபரின் கூற்றை தட்ட முடியாமல் சம்மதம் தெரிவித்தாள். இருள் சூழ்ந்துக் கொண்டது சூரியன் மறைந்து சந்திரன் தோன்றினான். காலை அவள் பல்கலைக்கழகம் செல்ல வெண்டும். உற்றார் உறவினர்கள் வந்து ஆயத்த வேலைகளை செய்தனர். அம்மாவின் புகைப்படம் ஒன்றையும் எடுத்து வைத்தாள். சூரியன் தன் கதிர்களை பரப்பிக் கொண்டு வெளிச்சத்தை கொடுத்தான். மதியின் வாழ்வும் விடியலை நோக்கி செல்கிறது. பல்கலைக்கழகம் செல்வதே அவளின் விடியல். விடியலை நோக்கி நகர்கிறாள் வளர்மதி.

# தோத்தாலும் ஜெயிச்சாலும் மீசையை முறுக்கு

வீணா திட்டம் ஏதும் போடாமல்
தானாக் கூட்டம் ஒன்று சேர்ந்ததுவே
இளசுகள் எல்லாம் சேர்ந்து
மனசிழகி மழலைகள் ஆனதுவே

தலைமைக்கு தலைவணங்கி
தனித்திறனை வெளிக்காட்டி
தன் தன் நேரிய சிந்தையை
கூரிய வாளென வீசினரே

தன்னைப் போல் எனை மதித்து
சம சந்தர்ப்பம் தான் சமைத்து
போட்டியை வரவேற்று பொறாமையை அடித்துடைத்து
இரத்தம் இறுகிய வேளையிலும் மனதிறுகாமல் இயைந்தனரே

ஆண்வேறு பெண்வேறு
சேர்ந்தாலே பெருந்தவறு.
என்ற மதியீனம் தான் அழித்து
சமத்துவம் கற்பித்தனரே

வென்றாலும் வெற்றி பெறத் தவறினாலும்
வெறி ஏதும் கொள்ளாமல்
தோத்தாலும் ஜெயிச்சாலும் மீசையை முறுக்கு
என ஜாலியோ ஜிம்கானா கொண்டனரே.

ஆசானே வழிப்படுத்த நீ இருக்க
வழிப்பட நாமுள்ளோம் என
குருவை மதித்து குதூகலித்தனரே
பெற்ற நேரிய சிந்தையை மரணம் வரை அழைப்பவர் தான்,
நம் மாணவ ஆசிரியரே!

- M.லட்சிகா -
கணிதப்பிரிவு

# நிலை மாறும் வாழ்க்கை

- தனுசியா கோவிந்தராசன் -

தடமில்லா வேகத்தில் பயணித்த இவ் உலகு இது
தரணியெங்கும் தளர்வோடு தடுமாறி இருக்கிறதே!

தாழ்வுண்டு உயர்வுண்டு தத்தம் வாழ்வெங்கும் தரமுண்டு
தாழ்வென்ன உயர்வென்ன தழலேந்தும் நோய்ப் பிணியாலே!

தித்திப்பால் திகைப்பூட்டி திசையெங்கும் திகழ்ந்த தன்று
தட்டமில்லா வாழ்க்கையைப் பெருந் திணறலோடு தந்தாயே!

தீயாய் எழும் உன் வேகம் திண்டலோடு திகழ்ந்ததிலே
தீர்வென்று ஒரு நோய் தீராமல் போனதேனோ!

துயிலெழுந்து தினமோடி பேரின்பம் கண்டோமே
துகளின்றி இந்நாட்டில் துயரத்தால் தொலைந்தது ஏன்!

தூங்காமல் துரத்தியோர் தொலைதூரம் சென்றதாலே
தூண்டலிலே வீழ்த்தி எம்மை துரும்பாக்கச் செய்தது ஏன்!

தெகிட்டாத சூழ்ச்சியொன்று சூழ்ந்திங்கு வந்ததிலே
தென்றல் திணறலோடு தோன்றி தேங்கித்தான் நிற்பது ஏன்!

தேன்பாடும் இசைகேட்டு தேடலோடு இசைவுற்ற நாம்
தேய்வோடு மனம் தேற்றி பஞ்சத்தில் தொடர்வது ஏன்!

தைரியத்தைக் கையிலேந்தி தினம் ஓய்வின்றி சுழன்றதிலே
தைமாறிப் பிறந்தது போல் நிலையின்றிச் சுழல்வது ஏன்!

தொட்டதெல்லாம் புகழேந்தி தொடுவானம் ஏறியதிலே
தொன்மைபோல் களமிறக்கி எம்மைப் பலமிழக்கச் செய்தது ஏன்!

தோன்றியெழும் காலமென்று கற்பனையில் மிதந்ததாலே
தோல்வியிலும் வாழவேண்டுமென்று தோன்றத்தான் செய்தது ஏன்!

## பேசும் படங்கள்...!

